
பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை 26.09.2025 | அதிர்வு 56

## தியாக தீபத்தின் நினைவேந்தல்



தமிழ் மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கை களை முன் வைத்து உண்ணா நோன் 03











### அனுராதபுரத்தில் வான் - லொறி மோதி கோர விபத்து

# முல்லைத்தீவைச் சேர்ந்த 4 இளைஞர்கள் மரணம்!

(பா.சதீசன்)

அனுராதபுரத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் முல்லைத் தீவைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் மூவர் காயங்க ளுக்கு உள்ளாகினர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பயணித்த வானும் லொறியும் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது. 03

# சாவகச்சேரியில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!!

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரி – நுணாவில் ஏ – 9 வீதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கிப் பயணித்த 03









ஐக்கிய சோசலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த தென்னிலங்கையின் இடதுசாரி தலைவர்களில் ஒருவர். அவர் தொழிற்சங்க வாதியும் கூட.

ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் அவர் போட்டியிட்டாலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அந்தத் தெற்கு தலைவரை வாக்களித்து வரவேற்கும் வாய்ப்பு வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்குக் கிட்டுவ தில்லை.

அந்தந்த சமயங்களில் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கை ஒட்டித் தமிழ்த் தலைமைகள் எடுக்கும் முடிவுக்கு ஏற்ப தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள். தமிழ் தலைமைகளுக்கும் தெற்கில் இவ்வாறு தமி ழர்களின் சுயநிர்ணய உரிமையை 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கும் தலைவர்களை மதிக்கும் எண்ணமோ சந்தர்ப்பமோ இருப்பதில்லை.

அத்தகைய தென்னிலங்கை தலைவரான சிறிதுங்க ஜெயசூரிய யாழ்ப்பாணத்தில் வந்து சில முற்போக்கான கருத்துக்களை சொல்லி இருக்கிறார். அவை கவனிக்கத்தக்கவை. அவர் கூறியவற்றின் சாரம் இதுதான்:-

அநுர அரசும் முன்னைய அரசுகளுக்கு நிகரான அரசுதான் என்பதை நிரூபித்து வருகின்றது.தேர்தல் மேடைகளில் கூறியவற்றை மறந்து மக்களை திசை திருப்பி தங்களின் ஆட்சியை கொண்டு செல்லவே அநுர அரசும் பாடுபடுகின்றது.

அநுர ஒரு சந்தர்ப்பவாதி. அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நாட்டை சீரழிக்கும் ஒருவர். அமெரிக்கா என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் முன்னெடுத்து வருகின்றார்.

இதேநேரம் சர்வ அதிகரம் கொண்ட அநுரவுக்கு நாட்டில் புரையோடிக் கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினையை தீர்க்க ஒரு கையொப்பம் போதும். ஆனால் அதை அவர் செய்ய மாட்டார்.

யாழ் மக்களுக்கு சர்வதேச கிரிக்கெட் மைதானம் அவசியமாக இருந்தாலும் அதைவிட அவசியமானவை எண்ணற்ற அளவில் இருக்கின்றன. ஆனால் அநுர அரசு மைதானத்தை காட்டி தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைக்க முயல்கிறது.

வடக்கில் இருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்றாலும் அவர்களில் ஒருவருக்கு கூட அமைச்சராக பொறுப்புக் கொடுக்காத அரசு இது.

வடக்கில் வந்து பேதங்கள் அற்ற ஆட்சி செய்வதாக கூறும் அநுர, தனது ஆட்சியில், அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களை ஓரங்கட்டி வைத்திருக்கின்றார்.

இதேநேரம் யாழ்ப்பாணம் சாரா ஒருவரை யாழ்பாணத்தின் அமைச்சராக்கி யாழ். மக்களை இழிவுபடுத்தும் செயலே முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்குக் காரணம் இலங்கைத் தமிழர் ஒருவர் அமைச்சரானால் தமிழ் மக்கள் பிரச்சினைகள் குறித்த தீர்வுக்கு குடைச்சல் கொடுப்பார் என்பதால்தான் அமைச்சு கொடுக்கப்படவில்லை. இதுவே உண்மை.

பலஸ்தீனத்ததை ஆதரித்து ஐ.நாவில் கருத்துக் கூறும் அநுர இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக்கொள்ள மாட்டார். ஏனெனில் அநுர ஓர் இனவாதக் குடும்பத்தின் பின்னணியில் இருந்து வந்தவர்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கம் சதித்திட்டத்தை முன்னெடுக்கின்றது. இதை முறியடிக்க வேண்டும்.

நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்லாது வடக்கு கடற்றொழில் சமூகத்தின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதுடன் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்களின் பாரம்பரிய பூர்வீக காணிகளை உடனடியாக விடுவிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். - இப்படி சிறிதுங்க ஜெயசூரிய வலியுறுத்தினார்.

தமிழ்த் தலைவர்கள் கூற வேண்டியவற்றை எல்லாம் தென்னிலங்கைச் சிங்களத் தலைவர் ஒருவர் துணிச்சலுடன் - வெளிப்படையாக - கூறியிருக்கின்றார்.

அதனால் தெற்கில் அவருக்கு எதிர்ப்பு நிச்சயம். ஆனால் பாவம் மனிதர். பரிதாபத்துக்குரிய தமிழர்களுக்காக உண்மைகளை அப்பட்டமாக - துணிச்சலாக - பேசும் அவரை வடக்கு, கிழக்கு தமிழர்களும் ஏறெடுத்துப் பார்க்கின்றார்கள் இல்லை. தங்களுக்காக நட்டாமுட்டித்தனம் பண்ணும் அரசியல் தலைவர்களைத்தான் தமிழ் மக்கள் வாக்களித்து அங்கீகரிப்பார்கள் போலும்.

கடந்த பொதுத்தேர்தலில் யாழ் மாவட்ட முடிவு அவர்களின் யோக்கியதைக்கு நல்ல சான்று...!

★ ★ ★

முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமை இராணுவம் விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. பெரும்பாலும் அந்த முகாம் இருந்த பகுதியும் பாடசாலைக் கட்டடங்களும் அடுத்து வரும் தினங்களில் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் மீளக் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின் சாணக்கியனின் ஐந்து வருடகால தொடர்ச்சியான தலையீட்டினால் இந்தப் பிரதேசம் விடுவிக்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் திற்குத்தெரிவானகாலப்பகுதியிலிருந்து - குறிப்பாக வடக்குக் கிழக்கிலே உள்ள இராணுவ முகாம்கள் மக்களது காணிகளில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பது - அவரால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த ஒரு விடயம்.

இது சம்பந்தமாக கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திலேயே இவற்றை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இக்காலத்தில் பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவர், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் போன்றவர்கள் "நாங்கள் முன்னின்று அவற்றை அகற்ற வேண்டும். பாதுகாப்பு அமைச்சுக் கூட்டத்திலே சாணக்கியன் கூறியதற்கு அமைவாக இவற்றைச் செய்யக் கூடாது" எனக் கூறி, அப்போது இந்த முகாம் உட்பட பல விடுவிக்கப்படுவதைத் தடுத்தார்கள். இதனால் அப்போதே இந்த இராணவ முகாம்கள் அகற்றும் வாய்ப்பு நழுவிப் போயிற்று.

இதனைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்ததன் பிற்பாடு சாணக்கியனின் வலியுறுத்தலின் விளைவாக பாதுகாப்பு அமைச்சுக்கான ஆலோசனைக் கூட்டத்திலே இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு முடிவு எட்டப்பட்டது. பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட்டன. இருந்த போதிலும் பாடசாலைகளுக்கு சொந்தமான காணிகள் விடுவிக்கப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு தேர்தலுக்கு பின்னர் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் இரண்டு பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான எம்.பிக்களின் ஆலோசனைக் கூட்டங்களிலே இவ்விடயம் சாணக்கியனால் வலியுறுத்தி முன்வைக்கப்பட்டது. இறுதியாக நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஒரு மாத காலத்திற்குள் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இது பாதுகாப்பு அமைச்சுக்கான எம்.பிக்களின்ஆலோசனைக் கூட்டத்தினுடைய கூட்டக் குறிப்பிலேயே சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலாக ஜனாதிபதியால் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டது என பதியப்பட்டுள்ளது. இப்போது இந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டிருக்கின்றது.

ஆக, சாணக்கியனின் தளராத முயற்சிக்குக் கிடைத்த பெறுபேறு இது.

"மேலும் மக்களது காணிகளிலே விடுவிக்கப்படாதுள்ள இராணுவ முகாம்களை மிக விரைவில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." - என இப்போது உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் சாணக்கியன் எம்.பி.

இந்த முகாம்களை விடுவிக்கச் செய்வது தொடர்பில் வெறுமனே நாடாளுமன்றத்தில் வலியுறுத்தித் திரும்பத் திரும்ப உரையாற்றுவதோ, அவ்வப்போது பகிரங்க அறிக்கைகளை வெளியிடுவதோ வேலை செய்யப் போவதில்லை. மாற்றாக, தந்திரோபாயமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அதற்கு முக்கிய தளம் அல்லது இடம் பாதுகாப்பு அமைச்சுக்கான ஆலோசனைக் குழு கூட்டம்தான். ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற எம்.பிக்கள் பங்கு பற்றி, பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை முன் வைக்க முடியும். வெறுமனே அந்தக் கூட்டங்களுக்கு போய் விடயங்களைச் சுட்டிக் காட்டி புரியாத மொழியில் நீட்டோலை வைப்பது - வாசிப்பது - பயன் தராது.

அந்தக் கூட்டத்துக்கு போக முன்னரே - குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் - சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இன்ன, இன்ன விடயங்களைக் கிளப்ப இருக்கின்றேன், அவை தொடர்பான ஆயத்தங்களுடன் வாருங்கள் என்று குறிப்பிட்டு, அந்த விடயங்களை ஆலோசனைக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலிலும் சேர்த்துக் கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வழிப்படுத்த வேண்டும்.

அப்படிச் சேர்த்துக் கொண்டதன் மூலம்தான், இந்த விடயங்கள் குறித்து நேரடியாக பாதுகாப்புத்துறை அதிகாரிகளையும் ஜனாதிபதியையும் வைத்துக் கொண்டு, விடயங்களைத் தீர்மானிக்கக் கூடிய நகர்வுகளை சாணக்கியன் முன்னெடுக்க வைத்திருக்கின்றார்.

முறக்கொட்டாஞ்சேனை முகாம் மாத்திரமல்ல, கிழக்கில் இராணுவத்தினரின் கைகளில் உள்ள குருக்கள்மடம் இராணுவ முகாம் (அதற்குள் மக்களின் விளையாட்டு மைதானம் ஒன்று சிக்கி உள்ளது), பாலையடிவெட்டை இராணுவ முகாம் (அதற்குள் மக்களின் சந்தை ஒன்று சிக்கியுள்ளது), காயங்

(03 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு பிரதிப் பிரதம செயலாளராக சிவரூபன் நியமனம்




வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிதி) என்.எஸ்.ஆர்.சிவரூபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை அவர் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்துகொண்டார்.

# கட்டுநாயக்கவில் கைதான சந்தேகநபரிடம் தீவிர விசாரணை! கோண்டாவில் பகுதியில் இருந்து கைக்குண்டு, வாள்கள் மீட்பு!!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர், கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில், கோண்டாவில் பகுதியில் இருந்து கைக்குண்டும், இரு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல வேறு வாள்வெட்டுகள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர், கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கைதானார்.

அவர் யாழ்ப்பாணம் பெருங்குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யாழ்ப்பாணம் கைக்குண்டு ஒன்றையும், இரு வாள்களையும் மீட்டனர்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை இரண்டு நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிப்பதற்கு பொலிஸார் அனுமதி கோரிய நிலையில், நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேணி கடற்கரையோர இராணுவ முகாம் (அதற்குள் பாடசாலை ஒன்று சிக்கி உள்ளது), தவிரவும் தாண்டியடி துயிலுமில்லம் ஆகியவையும் படைவசம் உள்ளன.

இதில் தாண்டியடி துயிலும் இல்லம் விசேட அதிரடிப்படையினரினால் சட்டரீதியாக நில சுவீகரிப்பு செய்யப்பட்டு, அதன் உரிமை விசேட அதிரடிப்படைவசம் சென்று விட்டது. குறைந்தபட்சம் அந்த முகாமின் ஒரு பகுதியையாவது நினைவேந்தல் செய்வதற்காக விட்டுத் தருமாறு சாணக்கியன் ஜனாதிபதியை வலியுறுத்தி உள்ளார்.

குருக்கள் மடம் இராணுவ முகாமும், பாலையடிவெட்டை இராணுவ முகாமும் மிக விரைவில் விடுவிக்கப்படும் எனத் தெரிகிறது.

இதில் பாலையடிவெட்டை இராணுவ முகாம் பகுதி ஏற்கனவே விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு, மக்களிடம் காணிகள் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவற்றை ஒரு பெரிய விழா வைத்து மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அப்போது பிரதி அமைச்சராக இருந்த வியாழேந்திரன் போன்றோர் வலியுறுத்தியமையால் அந்த காணிகள் மீண்டும் வேலியிடப்பட்டு இராணுவத்தினால் கையகப்பசுத்தப்பட்டு விட்டன. அவையும் விரைவில் விடுவிக்கப்படும் என இப்போது தெரிகிறது.

காயங்கேணி முகாமுக்குள் பாடசாலை சிக்கி உள்ளது. ஆனால் அதை ஒட்டி, கடற்கரைக்கு நெருக்கமாக இராணுவத்தினரின் சுற்றுலா விடுதி ஒன்றை இராணுவம் பெருஞ் செலவில் அமைத்து இருப்பதனால், அதை மீள ஒப்படைப்பதில் சிக்கல் நிலவுவதாகத் தெரிகிறது.

எது, எப்படி என்றாலும் அந்தப் பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் பாதுகாப்பு அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு ஜனாதிபதிக்கு, அவருக்குரிய மொழியில், சாணக்கியன் கொடுக்கும் 'குடைச்சல்' சரியாக வேலை செய்வதாகவே தெரிகின்றது. அதன் பயன் அடுத்து வரும் வாரங்களில் மேலும் கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

⋆ ⋆ ⋆

## முல்லைத்தீவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில், செம்மலையைச் சேர்ந்த தி.விமலானந்தன் (வயது 38), வள்ளிபுனத்தைச் சேர்ந்த சசிகுமார் (வயது 31), புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நிஷாந்த் (வயது 25), புதுக்குடியிருப்பு, 9ஆம் வட்டாரம் – மல்லிகைத்தீவைச் சேர்ந்த சேர்ந்த ந.தேனுயன் (வயது 25) ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

அனுராதபுரம் – குருநாகல் பிரதான வீதியில் தலாவ – மீரிகம சந்திக்கு அண்மையாக மொரகொட என்ற இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் காயமடைந்த மூவர் தலாவ, அனுராதபுரம் போதனா வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

வானின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாவகச்சேரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பரை, அதே திசையில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்த் திசையாக யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த இளைஞர் செலுத்திய மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதனால் மேற்படி இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி பகுதியைச் சேர்ந்த திலகீஸ்வரன் யதுஸ் (வயது 20) என்ற இளைஞரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டுநினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு, இன்று யாழ். நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தில் நடைபெறவுள்ளது.

தியாக தீபம் திலீபன் ஆகுதியான நேரமான காலை 10.48 மணிக்குச் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.




# புதுக்குடியிருப்பு பிரதேசசபை வளாகத்தில் தியாக தீபம் திலீபனுக்கு நினைவு அஞ்சலி

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில், தாயக செயலணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் ஊர்தி பவனிக்கான அஞ்சலி நிகழ்வு நேற்றையதினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே. கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து 38 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலியை செலுத்தினர்.

தாயக செயலணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்தி பவனி நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அஞ்சலியைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் ஊர்தி பவனி முன்னெடுக்கப்பட்டு, இன்று மன்னார் ஊடாக தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை அது சென்றடையவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.










நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# திலீபனுக்கு நீதி செய்யுங்கள்!

‘பிறர் வாழத் தன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் வரலாற்றில் என்றும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.’ - என்ற கூற்றிற்கு அமைய, ஈழத்தமிழரின் போராட்ட வரலாற்றில் நாறபத்தையாயிரத்திற்கும் மேறபட்டோர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

இருப்பினும், அகிம்சை என்னும் ஆயுதத்தைக் கையிலேந்தி, தமிழ் மக்களின் விடிவிற்காய் நீரின்றி, உணவின்றி, பசித்திருந்து பட்டினியால், அணுவணுவாய் நொந்து, வலி துடித்து, வாடி வதங்கி, உயிர் துறந்த ஓர் உத்தமனின் மகத்தான தியாகம் தமிழீழப் போராட்ட வரலாற்றில் பிரதான பங்கு வகிக்கின்றது. அந்தத் தியாகியின் 38 ஆவது வருட நினைவேந்தல் தினம் இன்று.

அறவழிப் போரிற்கு புது இலக்கணம் வகுத்தவர் திலீபன். காந்தி தேசத்திற்கே காந்தீயத்தின் வலிமையைப் போதித்தவர் அவர். தன்னை ஒறுத்து, தன் இனத்தின் வேணவாவை மட்டும் முன்னிறுத்திய அந்த இளைஞனின் மனவுறுதியை - சாத்வீக நெறி மீதான பற்றுறுதியை - புரிந்து கொண்டு மதிக்கத் தவறியமை மூலம் அன்றைய இந்திய ஆட்சியாளர்களும், அவர்களது ஆலோசகர்களும், இராஜ தந்திரிகளும் காந்தீயக் கோட்பாடுகளுக்கே பெருத்த அவமானத்தையும் இழுக்கையும் ஏற்படுத்தினர். காந்தீய நெறிமுறைக்கு பெரும் அவம் ஏற்படுத்திய பெருங் குற்றத்தை பாரத தேசமே புரிந்தது என்ற வரலாற்றுப் பழியைச் சுமக்கும் பேரவலத்தைத் தங்களது நாட்டுக்கு அன்றைய இந்திய ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

அமைதிப் படை என்ற போர்வையில் தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து வந்த இந்திய வல்லாதிக்க அரசின் காந்திய விரோத முகத்திரையைக் கிழித்தெறிந்தார் திலீபன்.

காந்தீய நெறியில் போராடிய ஒரு போராளியை அந்தப் போராட்டத்திலேயே மரணிக்க அனுமதித்தமை மூலம் காந்தீய நெறிக்கே பெரும் அவப்பெயரை ஏற்படுத்திக் கொண்ட இந்திய ஆட்சிப் பீடத்தின் பழியைத் துடைப்பதற்கு புதிய அதிகார வர்க்கம் இனியாவது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச ரீதியிலும், பிராந்திய மட்டத்திலும், தேசிய ரீதியிலும் இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் வலிமையான ஓர் அரசியல் தலைமை இன்று இந்தியாவில் இருக்கின்றது. உலக வல்லாதிக்க அச்சுறுத்தல்களைக் கூட முகம் கொடுத்து துணிச்சலோடு நிமிர்ந்து நின்று பாரதத்தின் தனித்துவத்தையும் பெருமையையும் ஆட்சிச் சிறப்பையும் வலிமையையும் வெளிப்படுத்தும் அந்த ஆட்சிப் பீடம் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட - இழைக்கப்பட்டு வருகின்ற - கொடூரங்களுக்கு முடிவு கட்டும் விதத்தில் இப்போதாவது தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க முன் வர வேண்டும்.

அதன் மூலம் முன்னர் காந்தீய நெறியில் போராடிய தியாக தீபம் திலீபனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும் சேர்த்து நீதி செய்து, தன்னுடைய காந்தீய நெறியின் - தேசத்தின் - பெருமையை நிலைநிறுத்த இந்திய ஆட்சி பீடம் முன் வர வேண்டும்.

பாரதத்தின் பழைய ஆட்சிப் பீடத்தினதும், இராஜதந்திரிகளினதும் தவறுகளை மூடி மறைத்து அந்தப் போக்கைத் தொடர்ந்து நியாயப்படுத்திக் கொண்டு நிற்காமல், ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிட்ட வைப்பதிலும் தனது துணிச்சலான போக்கை இன்றைய பாரத அரசுத் தலைமை வெளிப்படுத்த வேண்டும்.

காந்தியை தேச பிதாவாகக் கொண்ட பாரத நாடு அந்த காந்தீய நெறியில் போராடிய ஒரு போராளிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குச் செய்யக்கூடிய சரியான பிராயச்சித்தம் அதுவாகவே இருக்கும்.

# காற்றாலைத் திட்டத்தை உடனடியாக கைவிடாவிடின் போராட்டம் தீவிரமாகும்

## அரசுக்குச் செல்வம் எம்.பி. எச்சரிக்கை



"மன்னாரில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும். இல்லையேல் போராட்டம் தீவிரமாகும்."

– இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மன்னாரில் காற்றாலைத் திட்டங்கள் வேண்டாம் என 50 நாள்களுக்கு மேலாக மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலகத்துக்கு முன்பாகவும் மன்னார் மக்களும், சிவில் அமைப்பினரும் போராட்டம் நடத்தியிருந்தனர். ஆனால், இந்தப் போராட்டங்களையெல்லாம் கருத்திற் கொள்ளாத ஜனாதிபதி அநுர, காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்களையும் அனுமதியையும் வழங்கியுள்ளார்.

மன்னார் மக்களின் வாழ்வுரிமையை இந்த அரசாங்கம் மறுத்து வருகின்றது. மக்களின் இறையாண்மையை அரசாங்கம் மீறுகின்றது. இது நியாயமா? என இந்த உயரிய சபையில் கேட்கின்றேன்.

தற்போதைய ஜனாதிபதி போராட்ட இயக்கமொன்றில் இருந்து வந்துதான் இன்று அரசாங்கத்தின் தலைவராகியுள்ளார். ஆனால் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி, எமது மக்களின் உயிரை துச்சமென மதிக்கும் வகையிலேயே செயற்படுகின்றார். இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மன்னார் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடரும். இனிவரும் நாள்களில் கூடுதல் வீரியத்துடன், அதிகளவான மக்களுடன் அந்தப் போராட்டங்களை முன்னெடுப்போம்." – என்றார்.

# மருத்துவத் தவறால் சிறுமியின் கை அகற்றம்: தாதிய உத்தியோகத்தர் அதிரடியாகக் கைது!

## பிணையில் விடுவிக்கப்பட்ட அவருக்கு நாட்டை விட்டு வெளியேறத் தடை




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத் தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட விவகாரத்தில், இரண்டாவது சந்தேகநபரான தாதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் நாட்டை விட்டு வெளியேற முடியாத வகையில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைசாலி என்ற சிறுமி காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர். இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் உசைன் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

இதன்போது, பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான செ.லக்சயன், புரந்திரன் ஆகியோர் பல்வேறு விடயங்களை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

வழக்கின் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெறுகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான், வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான தாதிய உத்தியோகத்தரைக் கைது செய்து முற்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்து, அந்தத் தாதிய உத்தியோகத்தர், சிறுவர், பெண்கள் பிரிவால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அந்தத் தாதிய உத்தியோகத்தருக்குப் பிணை வழங்கிய நீதிவான், அவர் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாதவாறு பயணத் தடை விதித்துள்ளார்.



# ஆலங்குளம் காணியை இராணுவத்திடம் இருந்து விடுவிக்க துணுக்காய் பிரதேச சபை கோரிக்கை

(பா.சதீசன்)

முல்லைத்தீவு துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தை இராணுவத்திடமிருந்து விடுவித்து, அந்தப் பகுதியை புனித பிரதேசமாக அறிவிக்குமாறு கோரி தீர்மானம் ஒன்று துணுக்காய் பிரதேச சபை அமர்வில் கொண்டு வரப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச சபையின் 3ஆவது அமர்வு தவிசாளர் கனகரத்தினம் செந்தூரன் தலைமையில் நேற்று பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபை உறுப்பினர் சுயன்சனினால் இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. துயிலுமில்ல வளாகத்தில் மக்களின் காணிகளும் உள்ளடங்குவதாகவும் இந்த மக்கள் இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் ஆளுநரிடம் சென்று தமக்கான மாற்று காணிகளைக் கோரியிருந்தனர் எனவும் , இது தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதேச ஒருங்கிணைப்புகுழு கூட்டங்களிலும் இடம்பெற்றன எனவும் தெரிவித்த சபை உறுப்பினர் செல்வநாயகம் ரஜீவன் அந்த மக்களுக்கான மாற்று காணிகளை வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

துயிலுமில்ல காணி தொடர்பில் ஒரு முரண்பாடான நிலை தோன்றியதை அவதானித்த தவிசாளர் அந்த விடயத்தை வாக்கெடுப்புக்கு விடுவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறுக்கிட்ட பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார் சிந்துஜன் துயிலுமில்ல வளாகத்தில் பின்பக்கமாக உள்ள சில பகுதிகள்தான் மக்களினுடையவை எனவும், முதலில் தொடர்புடைய திணைக்களங்களுடன் கலந்தாலோசித்து விட்டு மாற்று காணிகளை அப்பகுதி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்

இது தொடர்பில் கருத்து உரைத்த தவிசாளர் கனகரத்தினம் செந்தூரன் –

துயிலுமில்லம் அமைந்துள்ள இடம் புனித பிரதேசமாக மாற்றப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு உடன்பாடு இருக்கின்றது. போரிலே இறந்தவர்களை மதிக்கின்ற பண்பாடு எங்களுடையது. புனித பிரதேசமாக அறிவிக்கப்படல் என்ற ஏற்பாடு உரிய நடைமுறைகளுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

அதிலே பொதுமக்களின் காணிகள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக ஆராயப்பட்டு மாற்று காணிகள் வழங்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுடன் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

பிரேரணை சபை உறுப்பினர்களின் அனுமதியுடன் தீர்மானமாக்கப்பட்டது.



# வழிமாறித் திரியும் காட்டுயானைகள் கூட்டம் களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலும் ஊடுருவல்

கடந்த 11 ம் திகதி மட்டக்களப்பு வாவியை கடந்து புதுக்குடியிருப்பு கிராமத்திற்குள் வந்த காட்டு யானைகள் திசை மாறி தினம் தினம் ஊர் ஊராக சுற்றித்திரிவதை அவதானிக்க முடிகிறது.

நேற்றைய தினம் தேற்றாத்தீவு பகுதியை கடந்து களுதாவளை, களுவாஞ்சிக்குடி ஆற்றங்கரை ஓரங்களை நோக்கி அவை நகர்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த காட்டு யானைகள் துரத்தும் பணியில் வெல்லாவெளி பகுதி வன ஜீவராசி திணைக்களத்தினர் தொடர்ந்தும் இரவு வேளையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் அழகிய கொம்பன் யானை ஒன்று உள்ளடங்கலாக மொத்தமாக 04 யானைகள் கூட்டமாக திரிவதையும் அவதானிக்க முடிகிறது.

இக்காட்டு யானைகள் கூட்டம் தொடர்ச்சியாக பல்வேறு பயன் தரும் மரங்களையும், விவசாய நிலங்களையும் அழித்துள்ளமை தமக்கு வேதனையளிப்பதாகவும் தமது பொருளாதாரம் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.நேற்று முன்தினம் சம்பவ இடத்திற்கு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.




# தெற்கில் நெல் மாபியாக்களின் களஞ்சியங்களை அரசாங்கம் உடனடியாகச் சோதனையிட வேண்டும்

## வவுனிய நெல் ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் தெரவிப்பு

(கி.வசந்தன்)

தென்னிலங்கை அரசு மாபியாக்களின் களஞ்சியங்களை அரசு உடனடியாக சோதனையிட வேண்டும் என வவுனிய நெல் ஆலை உரிமையாளர் சங்கத்தலைவர் சி.விவேகானந்தராஜா தெரிவித்தார்.

நேற்று வவுனியா வெளிக்குளத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:ஃ

எமது புதிய அரசாங்கமானது கூறியதை செய்யவில்லை என்பதை விட நிறைய நல்ல விடயங்களை செய்து வருகின்றது. குறிப்பாக போதைப் பொருள் பாவனை அற்ற இளம் சமூகத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. இது முழுமையாக நடக்கும் பட்சத்தில் மூவின் மக்களுக்கும் நல்லது நடக்கும் என எண்ணுகின்றோம்.

எமது நாட்டின் முதுகெலும்பாக விவசாயம் மட்டுமே காணப்படுகின்றது என புத்தஜீவிகள் உட்பட அனைவராலும் கூறினாலும் கூட விவசாயிகளை யாரும் ஒரு சதவீதமேனும் கருத்தில் கொள்வதாக தெரியவலில்லை. குறிப்பாக விவசாயிகள் மழையிலும், விச ஜந்துக்களின் மத்தியிலும் விவசாயத்தினை மேற்கொண்டு நெல்லினை சந்தைப்படுத்துகின்றனர். இவ்வாறு சந்தைப்படுத்தப்படும் போது அரலிய, நிபுன, சூர்யா, மகிந்த ரத்தின இவ்வாறான நிறைய தென்னிலங்கை முதலாளி வர்க்கமானது இலங்கையில் உள்ள நெல்லை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்கின்றனர்.

மேலும் இவ்வாறு கொள்வனவு செய்த நெலைப் பதப்படுத்தி தங்களது களஞ்சியங்களில், களஞ்சியப்படுத்துவதோடு நெல் விளைவிக்க முடியாத காலகட்டத்தில் அரிசியாக்கி அரசு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அதனைத் தட்டிக்கேட்க வேண்டிய உரிமை அநுர அரசிற்கு இருக்கின்றது. ஆனால் இந்த அரசு ஐஸ், கஞ்சா உட்பட போதைப் பொருள்கள் மற்றும் கள்வர்களை பிடிக்கின்றனர். இது ஒரு நல்ல விடயமாகும். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அன்றாடம் உணவாக இருக்கும் அரிசியினை தான்தோன்றித்தனமாக விலையில் விற்பனை செய்வதை கண்டும் காணாமல் இருப்பது போல் தெரிகின்றது. இதற்கு என்ன காரணம் என்றும் எங்களுக்குத் தெரியவில்லை.

தென்னிலங்கையில் அரசியைப் பதுக்கி வைத்த நெல் மாபியாக்கள் 350 ரூபாவிற்கு கீரிச்சம்பாவினை விற்பனை செய்கின்றனர். இவ்விலையானது கொழும்பு வாழ் மக்களை பொறுத்தவரையிலே சிறிய தொகையாக காணப்படலாம். ஆனால் இதனை உற்பத்தி செய்யும் இப்பிரதேச மக்களை பொறுத்தவரையிலே பெரிய தெகையாக இருக்கின்றது.

குறிப்பாக விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த ஈர நெல்லினை 7,500 தொடக்கம் 8,000 ரூபாவிற்கும் உலர்த்தப்பட்ட நெல்லினை 9,000 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றனர். மேலும் தங்கள் உணவிற்காக அரிசியினை 350 ரூபாவிற்கு வேண்டி உட்கொள்வது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

இதில் ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு இதற்குரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நாடு பூராகவும் ஒரே நாளில் தேடுதலில் ஈடுபட்டு அரிசியினை பல்வேறு இடங்களில் பதுக்குபவர்களைப் பிடிக்க வேண்டும்.

மேலும் வவுனியாவினை பொறுத்தவரையிலே இங்குள்ள சமையல் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தென்னிலங்கையில் உள்ள அலரிய, சூரியா, நீபலி அரிசிகளை தரவேண்டும் என்று சொல்வதோடு ஏனைய பெயர்களில் உள்ள அரிசிகளை கொண்டு தாங்கள் சமையல் செயற்பாட்டில் ஈடுபட மாட்டோம் என்கின்றனர். இதற்கு இவர்களிற்கும் தரகு பணம் வழங்கப்படுகின்றதோ தெரியாதுள்ளது. இவ்வாறான நிலையில் இங்குள்ள சிறிய அரிசி ஆலைகளை வைத்திருப்பவர்கள் வங்கி கடன் உட்பட பல்வேறு கடன்களை செலுத்த முடியாமல் நஷ்டமடையும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே அரசானது ஒரு சில அரிச மாபியாக்களின் களஞ்சியத்தை ஆராய்ந்து அவர்களின் இருப்பை அரசு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதோடு, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களிற்கும் சரியான பாடத்தைக் கொடுக்கும் பட்சத்தில் இலங்கையில் அரிசித்தட்டுப்பாடு ஏற்படாது.

அரிசி தட்டுப்பாடு வருவதை இவ் அரசு கண்டும் காணாமல் இருக்கின்றமை விவசாய மக்களுக்கு பெரும் மன அழுத்தத்தை உருவாக்கியியுள்ளது. குறிப்பாக வீட்டில் இருந்து நகைகளை அடகு வைத்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் விவசாய உபகரண விலை, பசளை, உழவு உட்பட ஏனையவற்றிற்கான விலை உயர்வுகளால் தங்கள் நகைகளை மீட்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

நாட்டின் முதுகெலும்பாக விவசாயம் இருப்பதாக் வேறு விடயங்களிற்கு அக்கறை காட்டும் இவ் அரசாங்கமானது இதற்கும் முழு அக்கறை காட்ட வேண்டும். அத்தோடு போதைப்பொருள் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கி எல்லோரும் தொழில் மேற்கொள்ளும் நிலைக்கு மாற்ற வேண்டும்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் விவசாயம் மேற்கொள்வதற்கு யாருமே இல்லை. பண்ணை செய்வதற்கு யாரும் இல்லை. கூலித்தொழில் செய்ய யாரும் இல்லை. இதற்கு காரணம் போதைப் பொருள்களை கைமாற்றுவதன் மூலமாக ஆயிரக்கணக்கில் பணம் ஈட்டுகின்றனர். இதனால் யாரும் கூலித்தொழில் செய்யவோ, சுயதொழில் செய்வதற்கோ முன்வருவதில்லை. நாடு நன்றாக வரவேண்டும் என்றால் இவ் அரசானது விவசாயத்தினை மேற்கொள்வதற்கான போதியளவு கவனத்தினை செலுத்த வேண்டும். – எனத் தெரிவித்தார்.





# சாவகச்சேரிப் பிரதேச சபையில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் தியாக தீபம் திலீபனின் உருவப்படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதேசசபைத் தவிசாளர் பொ. குகதாசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி அஞ்சலி நிகழ்வில் சபையின் உபதவிசாளர், உறுப்பினர்கள் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

அத்துடன் திலீபனது இலட்சியக் கனவு நிறைவேற சபையில் இரு நிமிடங்கள் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# சம்மாந்துறை செந்நெல் கிராமத்திற்குள் அத்துமீறிய யானைகளால் பெருஞ்சேதம்











(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை செந்நெல் கிராமம் 01 பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு 1.30 மணியளவில் நான்கு காட்டு யானைகள் அத்துமீறி நுழைந்து கடுமையான சேதங்களை ஏற்படுத்தியுள்ளன என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் செந்நெல் கிராமம் 02 பகுதியில் காட்டு யானைகள் கடுமையான சேதங்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பயிர் நிலங்கள், வளவு, வாழைத்தோட்டங்கள் மட்டுமன்றி, சில தென்னை மரங்களையும் அவை சேதப்படுத்தின என மக்கள் குறிப்பிட்டனர்.

இந்த செந்நெல் கிராமம் பகுதியில் தெருவிளக்குகள் போதாமையால், ஊர்மக்கள் யானைகளை விரட்டுவதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டனர். அதிகாலை 5 மணி வரை மக்களை அச்சுறுத்தும் வகையில் யானைகளின் நடமாட்டம் காணப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக சம் பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிர தேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# காற்றாலைக்கான உபகரணங்களை மன்னாருக்கு கொண்டு வருகின்றமையை உடனே நிறுத்துங்கள்!

## நயவஞ்சக முறையில் ஏமாற்றப்பட்டோம் என அரச அதிபருக்கு மகஜர்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைக்கத் தேவையான உபகரணங்களை திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்குக் கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட் தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட செயலகத்திற்குச் சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளித்த மகஜரில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

மன்னார் மக்கள் 50 நாள்களுக்கு மேலாக போராட்டம் செய்து கொண்டு, ஜனாதிபதியிடம் இருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்து இருந்த வேளையில், இவ்வாறான ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை நீங்கள் உடனடியாக எங்களுக்கு தரவில்லை என்பதும் கவலை அளிக்கிறது.

கடிதத்தை நாங்கள் வந்துதான் பெற்றுக் கொண்டோம். ஜனாதிபதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றன. ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார், மக்களின் வாழ்வை பாதிக்காத வகையில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்து இருந்தோம்.

நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஜனாதிபதியின் முடிவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடிவுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம்.

காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்றன.

தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேசவும். மக்களுடைய விருப்பத்திற்கும் உரிமைக்கும் எதிராக நீங்கள் செய்ய இருக்கும் நடவடிக்கைகளினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் நீங்களே பொறுப்பு கூற வேண்டி வரும்.


ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கும் வரை மக்கள் போராட்டமானது இலங்கை யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு முன்னெடுக்கப்படும். எங்கள் புனித போராட்டமானது விரிவடைந்து செல்வது உங்களுக்குத் தெரியும். அதை இன்னும் விரைவாக எமது நாடு பூராவும் விரிவுபடுத்த உள்ளோம்.


ஜனாதிபதி அவர்களினால் தரப்பட்ட ஒரு மாத கால வேலை நிறுத்தத்தை கவனிப்பதற்கு ஒரு குழு உங்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. உங்கள் குழுவானது அந்த பகுதியில் நடந்த வேலைகளைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

இலங்கை மின்சார சபையானது பாரிய வேலைகளை முன்னெடுத்துள்ளது. தரப்பட்ட கடிதங்கள் தெளிவில்லை. ஏமாற்றப் படுகின்ற விதத்தில் அமைந்துள்ளது.

எனவே தயவு செய்து உடனடியாக மக்களின் வாழ்வினையும் வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்வதை எதிர்பார்க்கின்றோம். - என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.


பிரஜைகள் குழு, மன்னார் மாவட்டம்
CITIZENS' COMMITTEE MANNAR DISTRICT
MCC


பிரஜைகள் குழு, மன்னார் மாவட்டம்
CITIZENS' COMMITTEE MANNAR DISTRICT
MCC


பிரஜைகள் குழு, மன்னார் மாவட்டம்
CITIZENS' COMMITTEE MANNAR DISTRICT
MCC





# தியாகிகள் சாகலாம்; தியாகங்கள் சாகா! திலீபன் நினைவேந்தலில் அஞ்சலியுரை

**(வி.ரி. சகாதேவராஜா)**

தியாகிகள் சாகலாம் தியாகங்கள் சாகாது. அது போல தியாகி திலீபனின் தியாகம் என்றும் உயிர் வாழும்.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற தியாகி திலீபனின் 38 ஆவது நினைவு தினத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

தியாகி திலிபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று வியாழக்கிழமை காரைதீவில் ஜெயசிறிலின் இல்லத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று தியாகி திலீபன் உயிருடன் இருந்தால் அவருக்கு வயது 62.அன்று 1987, செப்டம்பர்,26 இல் இருபத்தி மூன்று வயது இளைஞன். 12 தினங்கள் உண்ணா நோன்பிருந்து தாயகத்திற்காக உயிர் நீத்தான்.

இன்று 38 ஆண்டுகள் கழிந்து அவன் உயிரோடு இன்று இருந்தால் ஒரு வைத்திய நிபுணராக திருமணம் முடித்து, ஐந்தாறு பிள்ளைகளுடன் நன்றாய் வாழ்ந்திருப்பான்.

அவரின் பிள்ளைகள் கூட நல்ல நிலையில் இருந்திருப்பார்கள் அல்லவா..?

சிலவேளை,உலகத்தில் மதிக்கத்தக்க ஒப்பற்ற தலைவனாக கூட உயர்ந்திருப்பான், அரசியல் தலைவனாகவும் ஆகி இருப்பான்.

புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் சென்று வாழ்ந்தும் இருந்திருப்பான் அல்லவா?

அப்படி அவன் நினைக்கவில்லை. தமிழ் இனத்தையும், தமிழ் மண்ணையும், தமிழர் உரிமையையும் நேசித்தான். அடிமைவாழ்வை எதிர்த்தான். கொடுமைகளைக் கண்டு கொதித்தான். கொள்கையுடன் எழுந்து நின்றான்.அதனால், எமக்காக – எமது உரிமைக்காக – உணவைத் தவிர்த்து 12 தினங்கள் பட்டினியாய், பசியோடு இருந்து தியாகத்தால் உயிர் துறந்தான்.

சரித்திரத்தில் இடம் பிடித்தான்.

தாயகத்தின் கனவுடனே விடைபெற்றான்.

ஆம். தியாகி திலிபன் மறைந்து 38 வருடங்கள் கடந்தாலும் அவனின் தியாகம் மறையாது. மாறாது. வரலாறுகளை மறந்துவாழ்க்கையில்முன்னேறமுடியாது. – என்றார். உணர்வார்கள் பலரும் நினைவேந் தலில் பங்கேற்றனர்.












# திட்டங்களைத் தயாரிக்கும்போது மக்களுடன் கலந்துரையாடுங்கள்

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

2026ஆம் ஆண்டுக்குரிய திட்டங்களைத் தயாரிக்கும்போது மக்களுடன் கலந்துரையாடி அதனை முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்க மதிப்பீடு அடுத்த ஆண்டு நிச்சயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆளுநர் தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டார்.

திணைக்களங்களால் கட்டடங்கள் தேவை எனக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன எனவும், அந்தக் கட்டடங்கள் பின்னர் பயன்பாடின்றி உள்ளமையையும் அவதானிக்க முடிவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படக் கூடாது எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதன் பின்னர், அமைச்சின் கீழான ஒவ்வொரு திணைக்களங்களினதும் விடயதானங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவில் முன்னெடுக்கப்பட்ட விசேட பொதுச்சுகாதாரத் திட்டத்தின் அறிக்கையும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் இந்தத் திட்ட முன்னெடுப்பின்போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, திட்டமிடல், மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# லடாக் வன்முறைகளுக்கு பா.ஜ.க. அரசே காரணம்

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

லடாக்கில் ஏற்பட்ட வன்முறையால் விலைமதிப்பில்லாத 4 உயிர்கள் பறிபோனதற்கு மத்திய பா.ஜ.க. அரசே காரணம் என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் ஊடக வெளியீட்டுப் பிரிவு தலைவர் பவன் கெரா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

லடாக்கில் விலைமதிப்பற்ற உயிர்கள் பறிபோனது துயரகரமானது. அரசின் தோல்வியடைந்த வாக்குறுதிகளை இது நினைவூட்டுகிறது. ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு ஏற்பட்ட அவமானம், அமைதிக்கு வழி வகுக்கும் என கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் உறுதி அளிக்கப்பட்டது. 6 ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்குப் பதில், மத்திய அரசின் குறுகிய பார்வை ஜம்மு மற்றும் லடாக்கை வன்முறை நெருப்பில் தள்ளியுள்ளது. இந்த நெருக்கடி பா.ஜ.க. அரசு உருவாக்கியது. ஆனால், தற்போது பா.ஜ.க. மக்களின் கோரிக்கைகளை நியாயமற்ற முறையில் புறக்கணிக்க முயல்கிறது.

தங்களின் கண்ணியம் மற்றும் அடையாளத்தைப் பாதுகாக்க லடாக்கை ஆறாவது அட்டவணையின் கீழ் சேர்க்க வேண்டும் என்ற அம்மக்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது. இரக்கத்துடனும் அரசியல் சாதுர்யத்துடனும் அது அணுகப்பட வேண்டும். மக்களின் கோரிக்கை புறக்கணிக்கப்படக்கூடாது.” என்று குறிப்பிட்டுள்ளார்,

# விஜய் பிரச்சாரங்களுக்கு கட்டுப்பாடு விதிக்க கூடாது

## ஓ.பி.எஸ். கருத்து

விஜய் பிரச்சாரத்துக்கு கட்டுப்பாடு விதிக்க கூடாது என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மதுரை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை என்.டி.ஏ. கூட்டணிக்கு அழைப்பு விடுப்பது குறித்து பதில் சொல்ல விரும்பவில்லை. அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கட்சிக்குள் வருவதை வரவேற்கிறோம் என்று வைகை செல்வன் எந்த அடிப்படையில் கூறுகிறார் என்று தெரியவில்லை. தேர்தல் கூட்டணி குறித்து சி.வி. சண்முகம் பேசுகிறார்.

கூட்டணி சேர வேண்டும் என்று அவர் வீட்டு வாசலில் யார் நின்றார்கள்? தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்துக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டியதில்லை. திமுகதான் எதிரி என்று விஜய் கூறுவதற்கு திமுகதான் பதில் சொல்ல



வேண்டும். நாங்கள் அவருடன் சேருவது பற்றிய தகவல்கள் வதந்தியாகும். விஜய்க்கு கூட்டம் கூடுகிறது. இதை மறுக்க முடியாது. ஆனால், அது வாக்காக மாறுமா? என்பதை தேர்தல் முடிவு வெளியான பிறகே கூற முடியும்” என்று குறிப்பிட்டுள்ளார்.



# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பா.ஜ.க. பொறுப்பாளர்கள் நியமிப்பு

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பொறுப்பாளர்களை பாஜக நியமித்துள்ளது. இதேபோல், பிஹார் மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பொறுப்பாளர்களையும் அக்கட்சி நியமித்துள்ளது.

இது தொடர்பாக பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பொறுப்பாளர் மற்றும் இணை பொறுப்பாளர்களை கட்சித் தலைவர் ஜெ.பி.நட்டா நியமித்துள்ளார். அதன்படி, பா.ஜ.க . தேசிய துணைத் தலைவரும் மக்களவை உறுப்பினருமான பைஜயந்த் பாண்டா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கூட்டுறவுத்துறை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துறைகளின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் இணை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் உடனடியாக அமலுக்கு வருகிறது." என தெரிவித்துள்ளார்.

# காசா மீதான தாக்குதல்களுக்கு எதிராக இத்தாலியில் எதிர்ப்பு போராட்டங்கள்











காசா பகுதி மீதான தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இத்தாலிய நகரங்கள் மற்றும் துறைமுகங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் காரணமாகப் பல துறைமுகங்கள் முற்றிலுமாக முடங்கியுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜெனோவா மற்றும் நேபள்ஸ் போன்ற முக்கிய துறைமுகங்களில் பலஸ்தீன ஆதரவாளர்கள் துறைமுக வாயில்களை அடைத்து, போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த போராட்டங்கள் இத்தாலியின் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

காசா மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை தங்கள் போராட்டங்களைக் கைவிடப்போவதில்லை என போராட்டக்காரர்கள் குறிப்பிடுகின்றனர்.



# வெனிசுலாவில் ஒரே நாளில் நான்கு நிலஅதிர்வுகள் பதிவு

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் நேற்று நான்கு நிலஅதிர்வுகள் பதிவாகியுள்ளன.

அதன்படி, வெனிசுவெலாவில் நேற்று 6.3 முதல் 4.9 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன.

அந்த நாட்டின் தலைநகர் கராகசுக்கு மேற்கே 600 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஜுலியா மாகாணத்தில் இந்த நிலநடுக்கங்கள் மையம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, வீடுகள், கட்டிடங்கள் குலுங்கியதை அடுத்து, பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என கூறப்படுகிறது.

# பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதிக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை



பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசிக்கு சட்டவிரோத நிதியுதவி தொடர்பான வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லிபியத் தலைவர் கர்னல் முயம்மர் கடாபியிடமிருந்து மில்லியன் கணக்கான யூரோக்களை சட்டவிரோதமாக பெற்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் செயலற்ற ஊழல் மற்றும் சட்டவிரோத பிரச்சார நிதியுதவி தொடர்பான சில குற்றச்சாட்டுகளில் பாரிஸ் குற்றவியல் நீதிமன்றம் அவரை விடுவித்தாலும், முக்கிய குற்றச்சாட்டில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது.

கடாபியிடமிருந்து பெறப்பட்ட நிதி, 2007ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என நிக்கோலஸ் சர்கோசி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

70 வயதான சர்கோசி, 2007 முதல் 2012 வரை பிரான்சின் ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பூச்சொரிந்து அஞ்சலிக்கின்றோம்...!

தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.

தமிழினத்தை அடக்கியாள
சிங்கள தேசம் முற்பட்ட போது
பொங்கி எழுந்த – வல்வை
மைந்தன் அவன் கரம் பலம் பெற
ஊரெழு பெற்ற பார்த்தீபனும்
அணி சேர்ந்தாய்

தமிழினத்தின் விடிவுக்காய்
களமாடிய போது
அமைதி எனக் கோஷமிட்டு
பாரதப் படை தமிழர்
தேசம் வந்தது – அதற்கு
எதிராக எழுந்தாய்

ஐந்தம்சக் கோரிக்கைகளை
கையில் எடுத்து
காந்திய தேசத்தின்
முகத்திரையைக் கிழித்தாய்
பன்னிரு நாள் பசித்திருந்து
உருகி மரணித்தாய்

உருண்டோடி விட்டன
முப்பத்தெட்டு ஆண்டுகள்
உனது கோரிக்கை இன்றுவரை
தீர்க்கப்படவில்லை – பூச்சொரிந்து
அஞ்சலிக்கின்றோம்
தியாக தீபத்தை..!



– துலாபரன் புலந்தரராஸ் –

# புதிய கல்வி மறுசீரமைப்பின்போது தமிழர் அடையாளம் மறைக்கப்படுகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



"கல்வி திட்டத்தில் வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழரின் வரலாறுகள் மற்றும் தமிழர் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன. புதிய கல்வி சீர்த்திருத் தத்தில் இவற்றுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும்.புதிய கல்வி மறுசீரமைப்பு மாணவர்களுக்கு சுமையானதாக அமைய கூடாது."

– இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடை பெற்ற அமர்வின் போது நிலையியல் கட்டளை 27/ 2இன் கீழ், பிரதமரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது மேற்கண்டவாறு வினவினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சமய பாடத்தில் சைவ சமயம் சீராக முன்னெடுக்கப்படவில்லை. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழர் வரலாறு மற்றும் தமிழ் மொழி இலச்சினைகள் அடையாளங்கள் திட்டமிட்டே மறைக் கப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் புதிய கல்விச் சீர் திருத்தத்தில் கொண்டு வரப்படுமா?

இலங்கையன் கல்வித்துறையில் கலைத்திட்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் இப்பொழுது கொண்டு வரப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பான சில விளக்கமூட்டும் கூட்டங்களும் தங்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது. ஆனால் புதிய கலைத்திட்டம் மாணவர்களுக்கு சுமையைக் குறைப்பதாகவும், கல்வியில் புதிய புத்தாக்கத் தேடல்களைக் கொண்டு வருவதற் கான வழிமுறையாகவும் இருக்குமென கூறப்படுகின்றது.

தரம் 06 இற்கு 15 கட்டாய பாடங்கள், தெரிவு பாடங்கள் 03 என 18 பாடங்களாயின் நேர அட்டவணை தயாரிப்பதில் உள்ள இடர்பாடுகள், நிலை மாற்றுத் திறன்களில் மாண வன் 2 பாடங்களைத் தெரிவு செய்தல், இவ்வளவு காலமும் தவணைக்கு 265 மணித்தியாலங்களாக இருந்த மாணவ னின் கற்றல் நேரம் தற்போதைய புதிய கலைத்திட்ட வரவால் 365 மணித்தியாலங்களாக வர உள்ளது. இதுவரை காலமும் இருந்ததை விட மாணவனுக்கு 30வீத சுமை அதிகரித் துள்ளது.

சமய பாடங்களில் சைவ சமயம் சீராக முன்னெடுக்கப்பட வில்லை. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழர் வரலாறுகள், தமிழ் இலச்சினைகள் அடையாளங்கள் திட்ட மிட்டே மறைக்கப்படுகின்றன. இவற்றுக்கான தீர்வுகள் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்படுமா?

அத்துடன் புதிய கல்விக் கலைத்திட்டம் எப்போது நடை முறைக்கு வரும்? அதற்கான வெள்ளை அறிக்கை வெளியி டப்படுமா? தேசிய கல்வி நிறுவகத்தில் அமைக்கப்பட்டுள்ள "கல்வி சார் அலுவல்கள் சபை, கல்விப் பேரவைக்குழு; இரண்டிலும் தமிழ் மொழி சார்ந்த உத்தியோகத்தர்கள் யாராவது உள்ளடக்கப்பட்டுள்ளார்களா? மற்றும் கலைத் திட்டக் கொள்கை அல்லது வெள்ளையறிக்கை சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுகிறவர்களின் பெயர்ப்பட்டியலைச் சபைக்குச் சமர்ப்பிக்க முடியுமா? அத்துடன்,புதிய கல்வி சீர்திருத்த அமுலாக்க குழுவில் தமிழ் மொழிமூலம் உள்ள பேராசிரியர்கள், பாட நிபுணத்துவம் கொண்டவர்கள் எத்தனை பேர் உள்ளடங்கியுள்ளார்கள்? என்பதனை கேட்கின்றேன்.

இதேவேளை கல்வி அமைச்சில் தமிழ் மூலமான உத்தி யோகத்தர்கள் 20 துறைகளில் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அதேபோன்று சைவ சமய பாடத்தில் நடராஜரின் வடிவத்தை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கும் போது சிலர் இதனை எதிர்ப்பதாக அறிகின்றோம். நீங்கள் ஒவ்வொரு பாடதுறைகளிலும் அது தொடர்பான பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் நிபுணர்கள், சமய நிறுவனங்களை யும் அழைத்து எங்களுடனும் கூட்டத்தை ஏற்பாடு செய்து தீர் மானங்களை எடுக்குமாறு கேட்கின்றேன்.அத்துடன் வரலாறு, சித்திரம் பாடங்களில் தமிழர்களுடைய வரலாறுகள், அடை யாளங்கள், மன்னர்களின் பெயர்கள் நிறைய இல்லா மல் செய்யப்படுகின்றது. அந்த விடயங்களில் உங்களின் கரிசனைகளை அறிய முடியுமா?"– என்றார்.

இதற்கு எழுந்து பதிலளித்த பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி

"2026 ஜனவரியில் முதலாம் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பாடத்திட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத் தப்படும். அதன் பிறகு படிப்படியாக மற்ற வகுப்புகளுக் கும் இந்தத் திருத்தங்கள் செயல்படுத்தப்படும். முழுமை யான திருத்தங்களைப் பற்றிய முழு ஆவணம் விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுமாறு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் சமயம்,வரலாறு உள்ளிட்ட பாடங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட கல்வி குழுக்களுடன் கலந்துரையாடப்படுகின் றன."– என்றார்.

# தனியார் பஸ்களிலும் பயணச்சீட்டு கட்டாயம்



அடுத்த மாதம் முதல் திகதி முதல் தனியார் பஸ்களில் பயணச்சீட்டு வழங் குவதும் பெறுவதும் கட்டாயமாக்கப்படும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித் துள்ளது.

மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலை வர் காமினி ஜெயசிங்க இதனை தெரிவித் துள்ளார்.

பயணச்சீட்டு வழங்காத நடத்துநர்கள் மற்றும் பயணச் பயணச்சீட்டுகளைப் பெறாத பயணிகள் மீது சட்டம் அமுல்படுத் தப்படும் என்றும் தெரிவித்தார்.

பயணிகள் பஸ்களில் ஜி.பி.எஸ். சாத னங்கள் பொருத்தப்படும் என்றும் இந்த ஆண்டு இறுதிக்குள் அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதி அறிமுகப்ப டுத்தப்படும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.



# நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் ஐ.எம்.எவ். இணக்கத்தை மாற்ற வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

“நாட்டுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இப்போதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏற்றுமதியாளர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அரசாங்கம் நுண் பொருளாதாரம், பேரண்ட பொருளாதாரம் குறித்து சிந்திப்பது போலவே, தனிநபர்கள், குடும்பங்கள், தொழில்முனைவோர் மற்றும் வியாபாரிகள் தொடர்பிலும் சிந்திக்க வேண்டும். இன்றும் கூட, நுண் பொருளாதாரத்தில் தனிநபர், சமூகம் மற்றும் குடும்ப அலகுகள் அழுத்தங்களைச் சந்தித்து வருகின்றன.

அரசாங்கம் ஏற்றுமதிக்கு உகந்த கொள்கையைப் பின்பற்றினால், சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடி ஒக்டோபர் 1 முதல் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை நீக்குவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

தேர்தலின் போது வாக்குறுதியளித்த பிரகாரம், புதிய சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் ஏற்றுமதிக்கு உகந்த பெறுமதி சேர் வரி தக்கவைக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் அது இன்று நீக்கப்படும் நிலையே காணப்படுகின்றது.

விநியோகஸ்தர்களிடமிருந்து வரி அறவிடுவதற்குப் பதிலாக, பெறுமதி சேர் வரி இன்வாய்ஸ் வழங்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் குறித்து கவலை இருந்தால்,நாணய நிதிய விதிமுறைகளின் பேரில் இவை ஏன் நீக்கப்படுகின்றன என்பதில் பிரச்சினை காணப்படுகின்றன.

இது ஏற்றுமதியாளர்களுக்கு பணப்புழக்க சிக்கலை உருவாக்குகின்றமை இதன் பாதக அம்சமாக காணப்படுகிறது. தாமதங்கள் நேரத்தை வீணடிக்கும், செயல்திறனைக் குறைக்கும், நிர்வாகச் செலவுகளை அதிகரிக்கும், ஏற்றுமதித் துறையில் போட்டியிட வாய்ப்புள்ள பிற நாடுகள் இந்தப் பிரச்சினையில் விரைந்து செயல்படும் நிலை எமக்கு பாதகமாக அமையும். நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்குக் கூட மூலதனப் பிரச்சினைகளை இது உருவாக்கும்.

வரி இணக்கத்தையும் வரி அறவீட்டையும் அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிபந்தனையை நாணய நிதியம் 2024 ஜூனில் விதித்துள்ளது. காலாண்டுக்கு ஒருமுறை பெற்றுத்தரும் 2.9 பில்லியனுக்கும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, நமது நாட்டில் ஏற்றுமதியாளர்கள் கடுமையான பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இறுதி நேரத்திலேனும் நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும், டிஜிட்டல்மயமாக்கல் நிறைவுறும் வரையும் இதை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக 260,000 தொழில்முனைவோர் சிரமத்திற்கு ஆளானார்கள். இப்போதாவது சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடாமல் செயல்படுமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம். அமைச்சரால் முன்வைக்கப்படும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒருபோதும் கபட அரசியலில் ஈடுபட மாட்டோம். இரண்டு காலாண்டுகளாக பொருளாதார வளர்ச்சி இலக்குகளை தாண்டியது மகிழ்ச்சி அளிக்கிறது. 2028 முதல் ஆண்டுதோறும் 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த அரசாங்கம் தயார் நிலையிலா இருக்கிறது என நாம் கேள்வி எழுப்புகிறோம். முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட நாணய நிதிய ஒப்பந்தத்தை அவ்வாறே பின்பற்றாமல் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தால், 2033 ஆம் ஆண்டிலிருந்தே கடனை திருப்பிச் செலுத்தும் நிலைக்கு வந்திருக்கலாம்.

நமது நாட்டில் சுமார் 50 சதவீதமானோர் பல்வேறு வகையான வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக பல நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. நுகர்வு, வருமானம், உற்பத்தி மற்றும் முதலீடு ஆகிய வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் வறுமை தொடர்பில் ஜனாதிபதி பேசியது நல்ல வியமாகும். என்றாலும், அஸ்வெசும மூலம் வறுமை ஒழிக்கப்படாது. அஸ்வெசும நுகர்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டதாகும். ஏற்றுமதி, உற்பத்தி அல்லது சேமிப்பு எதுவும் இதில் அடங்குவதில்லை. இது சிரமங்களை அனுபவிக்கும் மக்களுக்கு நுகர்வுக்கான நிதிசார் வசதியை பெற்றுக் கொடுப்பதற்காக மட்டுமே வழங்கப்பட்டு வருகிது. எனவே வறுமையை ஒழிப்பதற்கு நாட்டிற்கு ஒரு தெளிவான பயனுள்ள திட்டமொன்று அவசியமாகும்.”– என்றார்.

# தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் அடையாள உண்ணாவிரதம் இன்று

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பருத்தித்துறையில் இன்று அடையாள உண்ணாவிரதம் இடம்பெறவுள்ளது.

இந்த அடையாள உண்ணாவிரதம் பருத்தித்துறை மருதடி முருகன் கோவிலுக்கு முன்பாக உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்திடலில் இன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி 10.48 வரை முன்னெடுக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற உள்ளது.

சர்வமத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்று அடையாள உண்ணா நோன்பிருந்து தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த உள்ளனர்.



# பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை















பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் -26.09.2025




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. சளி மற்றும் இருமல் ஏற்படவும் வாய்ப்புள்ளது.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் பல் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதட்டபடாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.

உங்கள் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துங்கள். ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பல வீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மார்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.எனவே இருக்கும் பணத்தைக் கொண்டுநிர்வகிக்கஉங்களைதயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தை குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.




உங்கள் திட்டங்கள் மற்றும் அணுகுமுறை மூலம் இன்றைய நாளால் அற்புதமான நாளாக ஆக்குவீர்கள். உங்கள் உரையாடல் திறனை மேம்படுத்தி நன்மை பெறுவீர்கள்.

பணியில் சில தடுமாற்றங்கள் காணப்படும். பனிச் சுமை அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டத்தை சார்ந்திருப்பதை விட கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவையான அணுகுமுறை கொள்வீர்கள், இதனால் அன்பு மேலும் வளரும்.

நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். சிறய அளவில் கடன் பெறுவதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள்.

மன உளைச்சல் காரணமாக முதுகுவலிப் பிரச்சினைகள் ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -26.09.2025




அதிர்ஷ்டக்குறைவுகாரணமாககடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமானவர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது. ஆனால் சிறிது சோர்வுடன் காணப்படுவீர்கள்




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.

# உருளைக்கிழக்கு, வெங்காய விலைகள் மேலும் அதிகரிப்பு



பேலியகொட மற்றும் கொழும்பு – புறக்கோட்டை பொருளாதார நிலையங்களில் விற்பனை செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் விலைப் பட்டியல் வெளியாகியுள்ளது.

இதன்படி, வெலிமடை உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 190 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையிலும், நுவரெலியா உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 220 ரூபாயிலிருந்து 230 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அத்துடன், பாகிஸ்தான் உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 160 ரூபாயிலிருந்து 165 ரூபாய் வரையிலும் இந்தியன் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 180 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

உள்ளூர் சின்ன வெங்காயம் ஒரு கிலோகிராம் 220 ரூபாயிலிருந்து 240 ரூபாய் வரையிலும், இந்தியன் சின்ன வெங்காயம் 220 ரூபாயிலிருந்து 240 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் சின்ன வெங்காயம் ஒரு கிலோகிராம் 150 ரூபாயிலிருந்து 180 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

வெள்ளைப்பூடு ஒரு கிலோகிராம் 340 ரூபாயிலிருந்து 350 ரூபா வரையிலும், செத்தல் மிளகாய் ஒரு கிலோகிராம் 600 ரூபாயிலிருந்து 630 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.